### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து இன்று தி.மு.கழக வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழகத் **தலைவர்** அவர்களின் அறிவுரையின்படி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், கழக வேட்பாளர்களாக போட்டியிடுபவர்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்து குறித்து கலந்தாலோசிக்க, "தி.மு.க. வேட்பாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம்" இன்று (22.3.2024 - வெள்ளிக்கிழமை), காலை 11.00 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இதில், தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அவர்கள், கழக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்வது குறித்து ஆலோசனைகள் வழங்கிட உள்ளார்.

இக்கூட்டத்தில், கழக வேட்பாளர் அல்லது அவரது முகவர், கழக வேட்பாளர் போட்டியிடும் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை18.
நாள் - 20.3.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூர் தேர்தல் அலுவலகத்தை திருவள்ளூர் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைத்தார்கள். இதில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பூபதி, இராணிப்பேட்டை மாவட்ட துணைச் செயலாளர் எம்.சிவானந்தம், ஒன்றியச் செயலாளர் சி.ஜெ.சீனிவாசன், பேரூர்ச் செயலாளர் ஜோதி குமார் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

# 'இந்தியா' கூட்டணிக்கு பல்வேறு இயக்கங்கள் ஆதரவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து தெரிவித்தனர்!

*சென்னை, மார்ச் 22-*

நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது ஆகியோர் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் யாதவ மக்கள் இயக்கம் தலைமை ஒருங்கிணைப்பாளர் கு.ராஜாராம் மற்றும் நிர்வாகிகள்

அதே போன்று இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, தி.மு.க. கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை 19.3.2024 அன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்;

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா மற்றும் நிர்வாகிகள்;

ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் மற்றும் நிர்வாகிகள்;

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் மற்றும் நிர்வாகிகள்;

சமத்துவ மக்கள் கழகத்தின் தலைவர் எர்ணாவூர் நாராயணன் மற்றும் நிர்வாகிகள்; மனிதநேய ஜனநாயகக் கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி மற்றும் நிர்வாகிகள் மக்கள் விடுதலை கட்சி நிறுவனத் தலைவர் முருக வேல்ராஜன் மற்றும் நிர்வாகிகள்; தமிழ் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன் மற்றும் நிர்வாகிகள்; ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அமோக ஆதரவு அளிப்பதோடு, 'இந்தியா' கூட்டணி வெற்றிபெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வில் கழக பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ. இராசா, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், திருச்சி சிவா, எ.வ.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

# இராணுவ வீரர்கள் சென்ற ரயில் தடம் புரண்டது:

## பீகாரில் பரபரப்பு!

பாட்னா, மார்ச் 22–

பீகாரில் இராணுவ வீரர்கள் சென்ற ரயில் பெட்டிகளின் இணைப்பு துண்டிக்கப் பட்டதால் விபத்து ஏற்பட்டது. வீரர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். ராஜஸ்தானில் இருந்து மேற்குவங்க மாநிலம் சிலிகுரிக்கு சிறப்பு ரயில் மூலம் ராணுவ வீரர்கள் சென்று கொண்டிருந்தனர். பீகார் மாநிலம் கோரக்பூர் – நர்கதியாகஞ்ச் இடையே உள்ள பகாஹா ரயில் நிலையத்திற்கு ரயில் சென்ற போது, திடீரென ரயில் பெட்டிகளின் இணைப்பு ஒரு இடத்தில் துண்டித்தது. அதனால் முன்னாள் சென்ற இன்ஜினுடன் இணைக்கப் பட்ட பெட்டிகள் தனியாக சென்றது. மற்ற இணைப்பு பெட்டிகள் பாதி வழியில் நின்றது.

தகவலறிந்த ரயில்வே அதிகாரிகள், கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்து முன்னால் ஓடிக் கொண்டிருந்த ரயிலை நிறுத்தினர். இதுகுறித்து மேற்கு சப்பரன் கலெக்டர் தினேஷ் குமார் ராய் கூறுகையில், 'விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் மீட்புப் பணியை துரிதப்படுத்தி உள்ளனர். அதிர்ஷ்டவசமாக ராணுவ வீரர்கள் அனைவரும் பத்திரமாக உள்ளனர். தண்டவாளத்தை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு பின்னர், இந்த வழித்தடத்தில் விரைவில் ரயில்கள் இயக்கப்பட்டன' என்றார்.

### தி.மு.க. தேர்தல் அறிக்கையில்

# நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டலம்!

## முதல்வருக்கு இராஜேஸ்குமார் எம்.பி. நன்றி!

*நாமக்கல், மார்ச் 22 -*

நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டல அமைக்கப்படும் என தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளதற்கு, மாவட்டச் செயலாளர் இராஜேஸ்குமார் எம்.பி., தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து உள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேற்கு மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் முன்னிலை வகித்தார். நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பேசினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

கடந்த மாதம் தி.மு.க. சார்பில் லோக்சபா தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு ஆலோசனைக் கூட்டம் சேலத்தில் நடைபெற்றது.

இதில் நாமக்கல் மண்டல கோழிப்பண்ணையாளர்கள் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டு, நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டலம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் நாமக்கல்லில் தனி முட்டை ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படும் என தமிழக முதலமைச்சர் அறிவித்துள்ளார். இதன் மூலம் நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி அதிகரிக்கும்.

மேலும், பறவைக் காய்ச்சல் போன்ற நோய்களால் வேறு பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டால், நாமக்கல் பகுதியில் முட்டை ஏற்றுமதி பாதிக்காது. இதற்கு நாமக்கல் பகுதியைச் சேர்ந்த கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் முட்டை ஏற்றுமதியாளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர். மேலும் நாமக்கல் மாவட்டம் சோழசிராமணியில் இருந்து, ஈரோடு மாவட்டம் பாசூர் வரை ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் எனவும், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது.

இதன்மூலம் நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் பயனடைவார்கள்.

நாமக்கல் லோக்சபா தொகுதியில், இண்டியா கூட்டணியின் சார்பில், கொ.ம.தே.க. வேட்பாளர் சூரியமூர்த்தி தி.மு.க.வின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார். இதையொட்டி வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (22ம் தேதி) காலை 10 மணிக்கு, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது. 25ம் தேதி தி.மு.க. கூட்டணி கொ.ம.தே.க. வேட்பாளர் சூரியமூர்த்தி வேட்பு மனுத் தாக்கல் செய்ய உள்ளார். அன்று மாலை முதல் தீவிர தேர்தல் பிரச்சாரம் நடைபெறும். வருகிற 31ம் தேதி நாமக்கல், கரூர் மற்றும் ஈரோடு லோக்சபா தொகுதி தி.மு.க. தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஈரோட்டில் நடைபெற உள்ளது. அதில், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

